UNIVERSITY EXTENSION
16 DEC 195
MADURAI

## நாமக்கல் கவிஞரின்

# கீர்த்தனங்கள்

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

இன்ப நிலயம்

மயிலாப்பூர் — சென்னை-4.

...Grants Commission.

முதற்பதிப்பு : ஜனவரி 1954
உரிமை பதிவு செய்யப்பெற்றது.

விலை ரூ. 1—4—0

செங்குந்த மித்திரன் அச்சகம் சென்னை-1.

# பதிப்புரை

★

காந்தியடிகளின் பெருமைகளை—காந்தீயத்தின் சிறப்புக்களை ஏராளமான பாடல்களின் மூலம் நாமக்கல் கவிஞரவர்கள் விளக்கியுள்ளார்கள்.

காந்தியடிகளைப் பற்றியும்—காந்தீயத்தைப்பற்றியும்—இன்னும் பல சிறந்த கருத்துக்களைக் கொண்ட கீர்த்தனங்களையும் நாமக்க்ல் கவிஞரவர்கள் இயற்றியுள்ளார்கள். அவைகளின் தொகுப்பே இந்நூல்.

இதிலடங்கியுள்ள கீர்த்தனங்கள் யாவும் இசை பயில்பவர்களுக்கு மட்டுமல்லாமல்—படிப்போர் யாவரும் பரவசமடையும்படி அமைந்திருக்கிறன. இந் நூலை வெளியிடும் நல் வாய்ப்பளித்த நாமக்கல் கவிஞர் அவர்களுக்கு எங்கள் நன்றியும் வணக்கமும் உரியதாகும்.

**சோம. சுவாமிநாதன்**
இன்ப நிலையம்

10—1—54

# பொருளடக்கம்


| | பக்கம். |
|---|---|
| கண்டதுண்டோ சொல்லுவீர் | 7 |
| எம்மான் காந்தியை மறப்போமோ | 8 |
| பகைவனுக் கருள்செய் | 9 |
| கண்ணில் மறைந்து கருத்தில் | 10 |
| வள்ளல் காந்தி மஹான் | 11 |
| சபதம் செய்துகொள்வோம் | 12 |
| கவலைகள் சிதையும் கதை | 13 |
| நினைக்க நினைக்க உளம் இனிக்கும் | 14 |
| நிலை கொண்ட மெய்ஞ்ஞான | 15 |
| மனிதப் பிறப்பின் புதுமை | 16 |
| காணுத அற்புதங்கள் | 17 |
| காந்தியை நினை | 18 |
| கருணை வளர்க்க வேண்டும் | 19 |
| தெய்வத்தின் நாதம் | 20 |
| தேவருள் தெய்வம் | 21 |
| மறந்திடுவாயோ ? | 22 |
| நடைதரும் வேதம் | 23 |
| அருட்பெருஞ் சோதி | 24 |
| தியாகராஜன் | 25 |
| தமிழின் சாரம் | 26 |
| இலக்கிய இலக்கணம் | 27 |
| இறவாமல் இருக்க | 28 |
| மகிமை மனிதன் | 29 |
| அமுத வழி | 30 |
| புவி நலம் பெற | 31 |
| அச்சங்கள் நீங்கும் | 32 |
| குளிர்ந்திடும் செழுங்கனல் | 33 |
| அன்பிற்கு உயிர் தந்தோன் | 34 |
| ஊனுடல் கொண்ட ஒரு தெய்வம் | 35 |

| | பக்கம். |
|---|---|
| பண்பை வளர்க்கும் காந்தி | 36 |
| ஏற்ற மருந்து | 37 |
| எளியவர்க் குழைத்தவர் | 38 |
| கடமையும் கருணையும் | 39 |
| கடவுளைக்காட்டும் | 40 |
| கலகக் கலிதீர்க்கும் | 41 |
| கருணை வழி | 42 |
| ஒன்றை உணர்விக்க | 43 |
| கருணைமூர்த்தியின் | 44 |
| சொல்ல வொண்ணு | 45 |
| காந்தி ஜயந்தி | 46 |
| ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி | 47 |
| சுதந்தர தினம் | 48 |
| சாந்தியே காந்தி | 49 |
| தீர்க்க தரிசி | 50 |
| கடவுளை அறிந்தவர் | 51 |
| நெஞ்சொடு இரங்கல் | 52 |
| சக்தி ஸ்தோத்திரம் | 54 |
| வைஷ்ணவன் என்போன் | 55 |
| திருமுடிசூட்டிடுவோம் | 57 |
| தமிழன் பெருமை | 58 |
| நல்ல சமயம் | 60 |
| சும்மா கிடைக்குமோ | 61 |
| தேசத் தொண்டு | 62 |
| கொடி பறக்குது | 63 |
| வாழிய கொடியே | 65 |
| கொடியைப் போற்றி | 66 |
| ஆடு ராட்டே | 67 |
| சத்தியம் மறந்தனை | 68 |
| உண்மை வளர்ந்திடாமல் | 69 |
| என்ன உறக்கமடா ? | 70 |
| நல்ல வழி யிருக்க | 71 |
| இந்தியத் தாய் | 72 |
| புது வாழ்வு | 73 |
| யாராலே? | 74 |
| தமிழ் நாடு வாழ்க ! | 76 |

# கீர்த்தனங்கள்

# கண்டதுண்டோ சொல்லுவீர்

### பல்லவி

கண்டதுண்டோ சொல்லுவீர்—எங்கள்
காந்தியைப் போல் ஒரு சாந்தனை இவ்வுலகம் (கண்)

### அநுபல்லவி

எண்டிசை எங்கணும் மண்டலம் முழுதிலும்
இந்தச் சரித்திரம்போல் எந்தக் கதையும் உண்டோ (கண்)

### சரணங்கள்

பண்டைக் கதை எதிலும் படித்திலம் இவர்போல்
பக்தி வைராக்கியம் சுத்தச் செயல் படைத்தோர்
தொண்டர் குலத்துக் கெல்லாம் துணைதரும் பெருந்தவம்
துறந்தவர் யாவரினும் சிறந்திடப் பிறந்தவர் (கண்)

சித்தத்தைச் சுத்திசெய்ய மெத்தச் சிறந்தவழி
சித்தன் இக் காந்தியின் பக்தி புரிவதுதான்
நித்தம் ஒருதடவை காந்தியை நினைத்திடில்
நிச்சயம் இப்பிறப்பின் அச்சம் அகன்றுவிடும் (கண்)

ராமன் பெயரைச் சொல்லி ஏமனை எதிர்த்தவர்
ரகுபதி ராகவரின் வெகுமதி பலித்தவர்
தேமொழி ராமபக்தன் த்யாகைய சாமியைப்போல்
திவ்விய பகுளபஞ்சமிதனில் தேகம் விட்டார் (கண்)

# எம்மான் காந்தியை மறப்போமோ

### பல்லவி

எண்ணிய தவங்களை எடுத்தது முடித்துள
எம்மான் காந்தியை மறப்போமா !

### அநுபல்லவி

புண்ணிய நதிகளும் கண்ணிய மடைந்தன
புனிதன் அஸ்திகள் புகுந்ததனுல் (எண்)

### சரணங்கள்

வானமும் வையமும் வணங்கிடும் ஐயன்
வரந்தரும் தேவரும் வரம்பெறும் மெய்யன்
ஞானமும் தவங்களும் நயம்பெறும் துறவி
நால்வகை யோகமும் சால்புறும் பிறவி (எண்)

அண்டமும் சிறிதெனும் அமைதியின் பெருமை
அதைவிடப் பெரிதெனும் அருள்புரி அருமை
கண்டில தாகிய கடவுளின் நிலையை
காட்டிடும் காந்தியின் தெய்வீகக் கலையை (எண்)

மன்னுயிர் வாழ்ந்திடத் தன்னுயிர் கொடுத்தான்
மாபெரும் கருணையன் பரமனை அடுத்தான்
பொன்னுடல் சுமந்ததும் தீமையைப் போக்க
புகழுடன் இறந்ததும் அறங்களைக் காக்க (எண்)

# பகைவனுக் கருள்செய்

### பல்லவி

பகைவனுக் கருள்தர மிகமகிழ் காந்தியை
பாடுவ தே தவ மாம் (பகை)

### அநுபல்லவி

தகைபெரும் சால்பினை அகமுறப் போற்றிடில்
தரணியில் பகைமை உண்டோ (பகை)

### சரணங்கள்

மனிதப் பிறவிகளை மிருகங்கள் ஆக்கிவிட்ட
மாச்சரி யங்களெல்லாம் மறையத்தன் தேகம்விட்ட
புனிதப் பிறவியந்தப் புண்ணியன் காந்திஎண்ணம்
போற்றுவதே தவங்கள் ஆற்றுவ தாகும் திண்ணம்
(பகை)

ஆறறி வுள்ளதென்று கூறும் மனிதர் குலம்
அறிவைப் பறிகொடுத்து பகைமை வெறிபிடித்து
சீறி விழுந்தழியும் சின்னத் தனம் ஒழியும்
சிந்தையில் காந்தியைநாம் வந்தனை செய்துவரின் (பகை)

கொஞ்சிக் குலவினவர் அஞ்சிப் பதைபதைக்க
கூடி வசித்தவரைத் தேடிக் கொலைபுரியும்
நஞ்சிற் கொடியபகை நெஞ்சைவிட் டகன்றிட
நல்ல துணைநமக்கு வல்லவன் காந்தியின் பேர் (பகை)

# கண்ணில் மறைந்து கருத்தில் நிறைந்தவர்

### பல்லவி

கண்ணில் மறைந்து மக்கள் கருத்தில் நிறைந்துவிட்ட
காந்தியை மறப்போமா (கண்)

### அநுபல்லவி

மண்ணில் மனிதர்குலம் எண்ணில் நலம்அடைய
மார்க்கம் கொடுக்கும் இந்த தீர்க்க தரிசிகதை (கண்)

### சரணங்கள்

உன்னும் பொழுதிலெல்லாம் உள்ளம் மகிழ்ச்சி பொங்கும்
உண்மையின் அச்சமற்ற தன்மை நிலவித்தங்கும்
பொன்னும் புகழும்பெற பொறுமை இழந்தலையும்
புத்திக் குறைவுகளும் மெத்தத் திருந்தலுறும் (கண்)

பேசும் பொழுதிலெல்லாம் ஈசன் நினைவுதரும்
பேதமை விட்டொழியும் பேரருள் கிட்டி வரும்
பாசமும் பந்தம் அற்ற பணிகளில் பக்திநண்ணும்
பாரில் மனிதரெல்லாம் யாரும்சமமென் றெண்ணும்
(கண்)

கேட்ட வுடன்மனதின் வாட்டம் அகன்றுவிடும்
கீழ்மைக் குணங்களெல்லாம் ஓட்டம் பிடித்துக்கெடும்
ஆட்டம் அலைச்சல்தந்த ஆசைகள் ஓய்ந்துவிடும்
ஆண்டவன் சந்நிதியின் ஆனந்த சாந்திதொடும் (கண்)

# வள்ளல் காந்தி மஹான்

### பல்லவி

வள்ளுவன் குறள்களை வாழ்க்கையில் நடத்திய
வள்ளல் காந்தி மகான் (வள்ளுவன்)

### அநுபல்லவி

தெள்ளிய அறிவெனும் திருக்குறள் அறங்களை
செய்தவர் யாரெனும் ஐயம் அகன்றுவிட (வள்ளுவன்)

### சரணங்கள்

ஒன்ருய் நல்லது கொல்லா விரதமும்
உயர்வால் அடுத்தது பொய்யா சரதமும்
என்றுர் அதன்படி இவர் போல் நடந்தவர்
எவரும் இலரென புவனம் வியந்திட (வள்ளுவன்)

இன்ன செய்தவர்க்கும் இனியவை புரிந்தவன்
இறப்பினும் பிறஉயிரை எடுப்பதை மறந்தவன்
பொன்னே கொடுப்பினும் புகழே கிடைப்பினும்
புண்ணியம் நீங்கின எண்ணமும் விடுப்பவன்
(வள்ளுவன்)

துறவறம் வியந்திட இல்லறம் தொடர்ந்தவன்
துன்பங்கள் இடையிலும் இன்பங்கள் அடைந்தவன்
பெறலரும் வெற்றிகளைப் பிழையற்ற நல்வழியில்
பெற்றவர் காந்தியைப்போல் மற்றவர் இல்லையென
(வள்ளுவன்)

# சபதம் செய்துகொள்வோம்

### பல்லவி

சபதம் செய்து கொள்வோம்—காந்தி
சந்நிதி முன் இந்த (சபதம்)

### அநுபல்லவி

சத்திய சோதனை மெய்த்தவம் ஆற்றிய
உத்தமன் காந்தியின் பக்தியின் நித்தமும் (சபதம்)

### சரணங்கள்

ஜாதியில் எவரையும் தாழ்வெனக் கருதோம்
சமமுற யாவரும் சுகமுற தருவோம்
போதைகள் எதையும் பொருளெனத் தீண்டோம்
பூமியில் எவருக்கும் தீமையை வேண்டோம் (சபதம்)

உண்மைகள் அல்லன உரைத்திட மாட்டோம்
உயிர்க்கொலை செய்வதை பொறுத்திட மாட்டோம்
பெண்மையின் பெருமையைக் கெடுப்பது எண்ணோம்
பிறமத தூஷணை தொடுப்பது பண்ணோம் (சபதம்)

உழவையும் தொழிலையும் உயிரெனக் காப்போம்
உழைப்பின்றிச் சுகிப்பதை பழிப்புடன் பார்ப்போம்
தொழுதுண்டு வாழ்வதை துச்சமென் றிகழ்வோம்
தோட்டியின் வேலையும் மேலெனப் புகழ்வோம் (சபதம்)

# கவலைகள் சிதையும் கதை

### பல்லவி

காலையும் மாலையும் காந்தியின் கதையை
கருத்துடன் படிப்பவர் கவலைகள் சிதையும்

### அநுபல்லவி

மேலுள பரம்பொருள் மீதுளம் பொருந்தும்
மீறிய வெறிகளும் ஆறிடத் திருந்தும் (கா)

### சரணங்கள்

நூலுரை கல்வியும் நுணுங்கிய கேள்வியும்
நோக்கிடும் நலங்களை சீக்கிரம் அடைந்திட
மாலுறும் மதவெறி மமதைகள் தெளியும்
மரணம் என்பதன் அச்சமும் ஒழியும் (கா)

ஒழுக்கமும் சீலமும் உயர்ந்திடும் தினமும்
உத்தம நெறிகளை உகந்திடும் மனமும்
வழுக்கியும் தீயவை வாயில் வராது
வைவது கேட்பினும் வருத்தம் தராது (கா)

ஏழைகள் எனச்சொலி இழிவுகள் புரியார்
ஏறிய செல்வரும் அழிவுகள் தரியார்
வாழிய யாவரும் வாழ்ந்திட என்றே
வையகம் முழுதையும் வாழ்த்துவர் நன்றே (கா)

# நினைக்க நினைக்க உளம் இனிக்கும்

### பல்லவி

நினைக்க நினைக்க உள்ளம் இனிக்க இனிக்க இன்பம்
நிறைந்திடுமே எங்கள் காத்தியை நாம் (நி)

### அநுபல்லவி

பனிக்கப் பனிக்கக் கண்கள் ஆனந்த பாஷ்பம் வர
பரமன் தரிசனத்தை சிரமமின்றிப் பெறுவோம் (நி)

### சரணங்கள்

மூப்பெனும் காந்தியிடம் முருகன் இளமை கொஞ்சும்
முன்வர யாவருக்கும் மின்னென சக்தி விஞ்சும்
தாய்ப்பெரும் அன்புசிவம் தாண்டவம் புரிந்திடும்
தரித்திரம் காமனைப்போல் பார்வையில் எரிந்திடும் (நி)

கர்மபலன் கருதா கண்ணன் நினைவு வரும்
காரிய முயற்சியில் மாருதி ஊக்கம் தரும்
தர்மபலன்களெல்லாம் தானம் செய் துயிர்விட்ட
தன்னிகர் அற்ற அந்த கர்ணன் பெருமை கிட்டும் (நி)

தந்தை சொல் மிக்கதொரு மந்திரம் இல்லையென்ற
தசரதராமபிரான் நிசமிகும் நேமம் ஒன்றை
சிந்தையில் கஸ்தூரிபாய் சீதை சிறப்பு பொங்கும்
சிறுமைகள் விட்டொழியும் பெருமை நிரம்பித் தங்கும்
(நி)

# நிலை கொண்ட மெய்ஞ்ஞானக் கலைதந்தவர்

### பல்லவி

நிலை கொண்ட மெய்ஞ்ஞானக் கலைதந்த காந்திக்கு
சிலைவைத்து விட்டால்மட்டும் சிறப்பாமோ

### அநுபல்லவி

அலைகொண்ட நம்மனதில் அவன்கொண்ட செம்மைதங்கி
அதன்படி நடப்பது அதுவன்றோ இனிவேண்டும் (நி)

### சரணங்கள்

அச்சிட்டுப் புத்தகத்தில் மெச்சிப் புகழ்ந்துகொட்டி
ஆலயம் கட்டிவைத்து கோலங்கள் செய்து விட்டு
நச்சிட்ட ஆசைகளால் நாளும் அலைந்துழன்றால்
நமக்குத்தான் பலன் என்ன ? நாட்டுக்கும் என்ன
நன்மை ? (நி)

பொன்னால் உருவம்செய்து மணிகள் புதைத்திழைத்து
பொழுதுக்கும் முன் நின்று தொழுதாலும் பயன் என்ன
எந்நாளும் காந்தி வாழ்வை இதயத்தில் வைத்து யார்க்கும்
இம்சை செய்யாதிருந்தால் நம்செயல் அதுபோதும் (நி)

குணங்கள் உயரவன்றோ கோயில்கள் கட்டினோம்
கும்பிட்டு விட்டுநித்தம் வம்பிட்டு வாழ்வதுபோல்
குணமென்னும் நலமெல்லாம் குடிகொண்டு இந்நாட்டின்
குலதெய்வம் காந்திக்குச் சிலைமட்டும் போதாது (நி)

# மனிதப் பிறப்பின் புதுமை

## பல்லவி

மனிதப் பிறப்புக்கொரு புனிதப் புதுமை தந்த
மாதவன் காந்தி மகான்

## அநுபல்லவி

நினைதற் கரிய ஒரு மிகவும் புதியநெறி
நித்திய நல்லொழுக்க சத்திய சோதனையால் (மனித)

## சரணங்கள்

காட்டில் தனித்திருந்து காய்கனி மூலம் உண்டு
கடுந்தவம் தமக்கென்றே புரிந்த கதைகளுண்டு
நாட்டில் வசித்துப்பிறர் நலத்துக்கென்றே உழைத்த
நற்றவம் காந்தியைப்போல் மற்றவர் யாரிழைத்தார்?
(மனித)

உலகைத் துறந்த பின்னும் உடலிற் பிரியம் வைத்து
ஓடுவர் காயகற்பம் தேடுவர் காட்டைச் சுற்றி
சலுகைப் பிறஉயிர்க்கே ; தன்னுயிர் ஆசைவிட்டு
சாதித்த நன்னெறியால் போதித்தப் பொன் மொழியால்
(மனித)

உணவில் கிடைப்பதல்ல உடைகள் கொடுப்பதல்ல
உடலைப் பொறுத்ததல்ல உணர்வைக் கடைப்பிடித்து
மணலில் நதி அடியில் மறைந்துள்ள ஊற்றினைப்போல்
மக்களுக் குள்ளிருக்கும் சக்தியைப் போற்றினதால்
(மனித)

# காணாத அற்புதங்கள் கண்டது

### பல்லவி

காணாத அற்புதங்கள் கண்டது இவ்வுலகம்
காந்தி மகான் வாழ்வில்

### அநுபல்லவி

கோணாத நல்லறிவை கொடுக்கும் அவர் வழியை
கொள்ளா விடில்உலகில் கொடுமைகள் குறையாது (கா)

### சரணங்கள்

பொறுக்கி எடுத்த சொல்லைப் புதுக்கு அமுதம்பூசி
புளித்த செவிகள்கூட களித்து வியக்கப்பேசி
முறுக்கி எதிர்த்த பேரும் செருக்கை மறந்து ஐயன்
முன்வந்து பொன் தந்து சொன்னபடிக்குச் செய்யும் (கா)

உண்ணா விரதம் கொண்டு உலகை நடுங்கச் செய்து
ஒவ்வொரு மனிதரும் உள்ளம் திருந்தச்செய்து
கண்ணாரக் கண்டதெய்வம் காந்தி ஒருவரென்று
கைகுவித் துலகெல்லாம் மெய்சிலிர்த் திறைஞ்சிட (கா)

கொடுமையை எதிர்த்திடச் சிறைவாசம் சென்றனன்
கொலை எண்ணாப் போர்செய்து கொடுங்கோலை
வென்றனன்
மடமையில் இறுகிய தீண்டாமை மறைந்தது
மது என்ற அரக்கனும் முதுகிட்டுப் பறந்தனன். (கா)

# காந்தியை நினை

### பல்லவி

காந்தியை நினைப்பதே கடவுளை நினைப்பதாம்
கருத்தினில் இருத்திடுவோம்

### அநுபல்லவி

சாந்தமில் லாமல் சமரசம் இல்லை
சமரசம் இலையேல் சந்தோஷம் ஏது ? (கா)

### சரணங்கள்

சாந்தத்தின் சாகரம் காந்தியின் சரிதம்
சத்திய சேகரம் காந்தியின் விரதம்
தேர்ந்திடில் இதைவிட வேறெது தெய்வம்
தினந்தினம் காந்தியை நினைத்திடில் உய்வோம் (கா)

ஊணிலும் உடையிலும் உரையிலும் சுத்தன்
உள்ளும் புறமும் ஒன்றும் உண்மையின் பக்தன்
காணரும் கடவுளை காட்டிடும் துணைவன்
காந்தியின் வழியன்றி கதி எது இணையாம் (கா)

கொடுமையை வெறுக்கவும் கொலைவழி மறுக்கவும்
கோபக் குரோதங்களின் கூட்டுற வறுக்கவும்
கடுமொழி விலக்கவும் கபடத்தைத் தொலைக்கவும்
காந்தியின் நினைவன்றி மாந்தரின் இலக் கெது ? (கா)

# கருணை வளர்க்க வேண்டும்

பல்லவி

காந்தி உகுத்த ரத்தம் மாந்தர் அகத்திருந்து
கருணை வளர்க்க வேண்டும்

அநுபல்லவி

சூழ்ந்து குமுறுகின்ற போர்வெறிச் சூதுகளை
தூரத் தொலைத்து மக்கள் ஈரம் இரக்கம் பெற (காந்தி)

சரணங்கள்

மோகம் வெறித்தயுத்த மேகப்படலம் நம்மை
மூடிக் கழுத்தறுக்கத் தேடித் திரிகிறதன்
வேகம் குறைக்கவென்றே தேகம் விடுத்த ஐயன்
வீரரும் தீரர்களும் விழுந்து வணங்கும் துய்யன் (காந்தி)

விஞ்ஞானத் திமிர் உந்த வெற்றிக்கு வெறிவந்து
வீண்பட்ட கொலைசெய்யும் நாண்கெட்ட மனிதர்க்கு
அஞ்ஞானம் விட்டொழித்த மெய்ஞ்ஞானம் காட்ட [என்றே
அல்லும் பகலும் எண்ணி சொல்லும் செயலும் தந்த (காந்தி)

இதந்தரும் என்றுநம்பி சுதந்தரம் நொந்து பெற்றும்
இம்சை மிகுந்து மக்கள் தும்சம் புரிதல் கண்டு
மதந்தரும் வெறிகளை நிதந்தரப் பார்ப்பதிலும்
மாளுதல் நல்லதென்றே சூளுரை சொல்லி மாண்ட (காந்தி)

# தெய்வத்தின் நாதம்

### பல்லவி

காந்தியின் போதம் கருணைசங் கீதம்

### அநுபல்லவி

தேர்ந்திடில் அதுதான் தெய்வத்தின் நாதம் (காந்)

### சரணங்கள்

ராகமும் தாளமும் ரகுபதி அமைப்பு
ரஸனையும் பாவமும் ராகவன் சமைப்பு
வேகமும் கதிகளும் வித்தைப்ர சண்டம்
விரவலும் பரவலும் விஸ்தார அண்டம் (காந்)

களைத்தவ ரெல்லாம் செழித்திடும் ஓசை
களித்தறம் மறந்தவர் விழித்திடும் பாஷை
சுளித்தவர் யாவரும் சிரித்திடும் பாட்டு
சூதர்கள் உள்ளமும் தீதறும் கேட்டு (காந்)

கல்வியும் கேள்வியும் களித்துளம் குளிரும்
கலைகளும் புதுப்புது கிளைதரத் துளிரும்
செல்வமும் வறுமையும் சேர்ந்து கொண்டாடும்
சிறுமையும் பெருமையும் செயல்மறந் தாடும் (காந்)

# தேவருள் தெய்வம்

### பல்லவி

மனிதருள் தேவன் தேவருள் தெய்வம்
காந்தியை மறக்காதே

### அநுபல்லவி

புனிதருள் புனிதன் பூமியின் விந்தை
பொய்யா நெறிப் புதுமை (மனிதருள்)

### சரணங்கள்

நினைவுறும் பொழுதே நெஞ்சகம் குளிரும்
நிறைந்தநம் அகந்தைகள் நீங்கிடும் எளிதில்
சினமெனும் பகைமை இனமற மறையும்
சீலமும் ஒழுக்கமும் மேலுற நிறையும் (மனிதருள்)

வம்புகள் துன்புசெய் வாதுகள் மறப்போம்
வறியவர் நொந்தவர் வாழ்வுறப் புரப்போம்
அன்புகள் செய்திடும் ஆசைஉண் டாகும்
அழிவுகள் செய்திடும் இழிகுணம் போகும் (மனிதருள்)

உலகினர் யாவரும் ஒருகுலம் என்னும்
உண்மையை அடிக்கடி உணர்ந்திடப் பண்ணும்
பலவித வெறிகளின் பயித்தியம் தெளியும்
பகவான் விளங்கிடும் காந்தியின் ஒளியால் (மனிதருள்)

# மறந்திடுவாயோ?

### பல்லவி

மறந்திடுவாயோ மனமே காந்தியை
மறந்திடுவாயோ

### அநுபல்லவி

அறந்தரும் அண்ணலவன்
மறைந்தனன் கண்ணிலெனை (மறந்)

### சரணங்கள்

பெருந்தவத் தோர் என
அறிந்துள யாரினும்
அருந்திறல் நிறைந்தவன்
அற்புதம் புரிந்தவன் (மறந்)

அவன்பெயர் மொழிந்திடில்
எமன் பயம் ஒழிந்திடும்
தவம் தரும் நலங்களை
சுயம் பெற பலம் வரும் (மறந்)

தீமையின் இடையிலும்
வாய்மையும் நடுநிலை
நேர்மையும் நினைப்பினில்
தூய்மையும் பலித்திடும் (மறந்)

பணபலம் நடுங்கிட
படைபலம் ஒடுங்கிட
குணநலம் கொடுத்துநம்
குலப்புகழ் நிறுத்தினன் (மறந்)

# நடைதரும் வேதம்

### பல்லவி

கடவுளின் தூதன் காந்தி மகாத்மா

### அநுபல்லவி

நடைதரும் வேதம் - ஞானசங் கீதம்

### சரணங்கள்

நினைத்திடும் பொழுதே மனத்துயர் தீரும்
நெருங்கிட உணர்ந்தால் பெருங்குணம் சேரும்
அனைத்துள நேரமும் அவன்கதை ஓதின்
அன்பையும் அருளையும் அறிந்திடப் போதும் (கடவு)

கல்வியும் கேள்வியும் கருதிடும் பயனும்
கருணையின் நிலைசொல்லும் கலைகளின் நயனும்
பல்வித வேள்வியின் பலன்கள் கை கூடும்
பரம்பொருள் தூதன்நம் காந்தியைப் பாடின் (கடவு)

கோபமும் தாபமும் கூண்டொடு மறையும்
கொடுமையும் வணங்கிடும் குணநலம் நிறையும்
மாபெரும் காந்தியின் மகிமையைத் தொழுதால்
மண்டலம் எங்கணும் சண்டைகள் ஒழியும் (கடவு)

# அருட்பெருஞ் சோதி

### பல்லவி

அருட்பெரும் ஜோதியின் தனிப்பெரும் சுடராம்
அண்ணல் காந்தி மகான்

### அநுபல்லவி

பொருட்பெரும் அவன் அருள் பொன்னெறி போற்றிடில்
பூமியில் நிறைந்துள தீமைகள் மறைந்திடும் (அருட்)

### சரணங்கள்

பஞ்சமும் பட்டினியும் பஞ்சாய்ப் பறந்திடும்
பாதகம் செய்யச்சொல்லும் தீதுகள் குறைந்திடும்
கொஞ்சமும் இன்பமில்லா கோடானு கோடிமக்கள்
கும்பி எரிச்சலெல்லாம் அன்பின் குளிர்ச்சிபெறும்
(அருட்)

ஜாதி மதக்கலகம் சண்டைகள் தீர்ந்திடும்
சமுதா யங்களில் சமரசம் சேர்ந்திடும்
நீதி நெறிதவறு நினைவுகள் வளர்ந்திடும்
நித்திய வஸ்து உண்மை பக்தியும் கிளர்ந்திடும் (அருட்)

அரசியல் துறையிலும் ஆட்சியின் முறையிலும்
அயலெந்தக் காரியம் முயல்கிற நெறியிலும்
உரைசெயில் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும்
உண்மையின் ஒளிதொடும் நன்மையின் வழிசொலும்
(அருட்)

# தியாகராஜன்

### பல்லவி

தெய்வத்தின் ஒருபெயர் தியாகராஜன் என்பதனே
தெரிவிக்க வந்தகாந்தி தேவதூதன்

### அநுபல்லவி

வையத்தில் காந்தியைப்போல் பிறர்க்கென்றே வாழ்ந்
[திட்ட
வண்மையில் த்யாகத்தில் உண்மையில் யாருமில்லே
(தெய்)

### சரணங்கள்

இந்நிலத் துயரெல்லாம் தன்னலம் தருவது
இல்லாமை என்பதெல்லாம் ஈயாமல் வருவது
மன்னுயிர் வாழ்ந்திடத் தன்னுயிர் கொடுப்பது
மனிதர் குலத்துக்கெல்லாம் புனிதர்க்கே அடுப்பது
(தெய்)

காவியும் உடுக்காமல் காட்டுக்கும் செல்லாமல்
கர்மத்தில் தனக்கென்ருேர் காமமும் இல்லாமல்
பூவுல கினில்மக்கள் துன்பத்தைப் போக்கிட
பொன்னுயிர் கொடுப்பவர் தன்னரும் பக்தரெனும்
(தெய்)

சின்ன வயதுமுதல் தன்னலம் மறந்தவர்
தீமையுற் றவர்க்கெல்லாம் தாய்மையே புரிந்தவர்
இன்னுயிர் பிறர்வாழ விருப்புடன் ஈந்தவர்
இவரே அத்யாகராஜன் இறைவனேச் சேர்ந்தவர் (தெய்)

# தமிழின் சாரம்

**பல்லவி**

தமிழ்மொழி சாரம் காந்தியின் தீரம்
தமிழா மறக்காதே

**அநுபல்லவி**

அமிழ்தென நிரந்தரம் அறிவினை வாழ்த்திடும்
அன்பின் பணிபுரிந்து அருளின் நெறிதெரிந்த (தமிழ்)

**சரணங்கள்**

கொல்லா விரதமும் பொய்யாக் கொள்கையும்
குலமுறை அறம்எனக் கொடுப்பது தமிழே
எல்லா விதத்திலும் உலகம் கெட்டதெல்லாம்
இந்த இரண்டறத்தின் சிந்தனை விட்டதனால் (தமிழ்)

தன்னுயிர் இழப்பினும் பிற உயிர் அழிப்பதை
தவிர்ப்பது ஒன்றே தவங்களிற் சிறப்பென
சொன்னதும் செய்ததும் தொடர்ந்ததைப் பணிவதும்
தொல்குலத் தமிழரின் நல்வழக் காகும் (தமிழ்)

காமமும் கோபமும் கபடமும் நீங்கி
கசடறக் கற்றதனை நடத்தையில் தாங்கி
ஏமமும் ஜாமமும் ஈசனை வணங்கி
எல்லாம் அவன்செயல் என்பதில் இணங்கும் (தமிழ்)

# இலக்கிய இலக்கணம்

### பல்லவி

இலக்கியம் மிகப்புது இலக்கணம் பெற்றது
இலக்கணம் புதியதோர் இலக்கியம் கற்றது எம்மான்
[காந்தியினுல்

### அநுபல்லவி

புலக்குணம் மிகுந்துள பூமியைச் சீர்திருத்த
புண்ணியர் பற்பலபேர் எண்ணி எழுதிவைத்த (இலக்)

### சரணங்கள்

சத்தியம் தெய்வமென்று சாதித்த பேர்கள் உண்டு
சாந்தத்தைப் பற்றி நின்று போதித்த தீரர் உண்டு
உத்தமன் காந்தியைப்போல் மெத்தப் புதுமுறையில்
உழைத்தவர் யாருமில்லை உலகில் இது வரையில் (இலக்)

உயிரைத் திரணம் என்று உண்மைக் குழைத்ததுண்டு
உடலை மறந்துநன்மை ஊருக் கிழைத்த துண்டு
உயிரைப் பணயம்வைத்தே உலகுக் குதவிசெய்ய
உரைசொல்லி சொன்னபடி உயிர்தந்த காந்தி மெய்யால்
(இலக்)

சொல்லில் இனிமைவார்த்து செயல்களின் சுத்தம் பார்த்து
சொல்லுக்கும் செயலுக்கும் பேதம் வராமல் காத்து
கல்லும் கனியச்செய்யும் காந்தியின் வாழ்க்கையன்றோ
கல்விக்கும் இலக்கியம் கருணைக்கும் இலக்கணம் (இலக்)

# இறவாமல் இருக்க

## பல்லவி

இறவாமல் என்றென்றும் காந்தி இருக்க வேண்டின்
மறவாமல் அவர் தந்த மார்க்கம் நடக்கவேண்டும்

## அநுபல்லவி

பிறவாப் பெரும்பிறவி பிரிந்தாரே காந்தி என்று
பறவாய்ப் பறந்ததெல்லாம் பாசாங்கு அல்லவென்றால்

## சரணங்கள்

எல்லா மதங்களுக்கும் இறைவன் ஒருவனேதான்
எந்தெந்த ஜாதியாரும் வந்திக்கும் ஜோதி அது
அல்லாவும் ஈஸ்வரனும் அனைத்தும் அவனே என்று
அனுதினம் பிரார்த்தித்து அறிவிக்கும் காந்தி அண்ணல்
(இறவா)

இன்பமும் துன்பமும் எல்லார்க்கும் ஒன்றேதான்
இம்சை பிறர்க்குமட்டும் என்றேனும் நன்றாமோ ?
அன்புசெய் வாழ்க்கைதான் அறிவாகும் தமக்கென்று
அணுவேனும் பொய்யின்றி அனுஷ்டிக்கும் காந்தி ஐயன்
(இறவா)

உழைப்பின்றி சுகிப்பதும் சுகமின்றி உழைப்பதும்
உலகத்தில் என்றென்றும் கலகத்தை விளைவிப்பது
இளப்பமாய் நினைக்காமல் எல்லாரும் உழைத்திடில்
இம்சை குறைக்கவந்த காந்தீயம் செழித்திடும்
(இறவா)

# மகிமை மனிதன்

### பல்லவி

புனிதன் காந்தியை நினைக்கும் பொழுதே
புலன்களுக் கெட்டாப் புதுமைகள் தோன்றும்

### அநுபல்லவி

மனிதன் என்று இந்த மண்ணில் உதித்தவருள்
மற்றவர் யாவர் இந்த மகிமை படைத்தவர்கள் (புனி)

### சரணங்கள்

கல்வி நிறைந்தவர்கள் கலைகள் சிறந்தவர்கள்
கர்மம் உகந்தவர்கள் தர்மம் மிகுந்தவர்கள்
நல்வழி நின்றவர்கள் நானிலம் எங்குமுண்டு ;
நாமம் நினைத்தஉடன் ஏமன் பயமகற்றும் (புனி)

தவசு புரிந்தவருள் தானம் சொரிந்தவருள்
தன்னலம் முற்றும்விட்டு பன்னலம் தந்தவருள்
இவர்வழி வாழ்ந்தவர்கள் எண்ணற்ற பேர்களிலும்
எவர்க்குமில் லாதஎதோ இவர்க்குள் இருந்ததென
(புனி)

போதிக்க என்றுவந்த புண்ணிய வான்களுக்குள்
பூமியிற் கண்டபல அவதாரப் புருஷருள்
சாதித்து சத்தியத்தை சோதித்து ஆத்மபல
சக்தியைக் காட்டினவர் மற்றில்லை என்னத்தகும் (புனி)

# அமுத வழி

### பல்லவி

அறிவைக் கடைந்தெடுத்து அருளைக் கலந்துதரும்
அமுதன்றோ காந்தி வழி

### அநுபல்லவி

உறவைக் கெடுத்து மக்கள் உயிரை வதைத்து இந்த
உலகை நலித்து வரும் கலகக் கொடுமைதீர (அறிவை)

### சரணங்கள்

இறுகிக் கிடக்கும்பல இழிவான வழக்கங்கள்
இளகும் படிக்கு ஒரு இனிமையை அளிக்கவும்
குறுகிக் கிடந்தமனம் குமுறிப் புரட்சி கொண்டு
கொடுமையை எதிர்க்கவும் மடமையை உதிர்க்கவும்
(அறிவை)

மதமென்றும் நிறமென்றும் மொழியென்றும் வழி
[யென்றும்
மக்களைப் பிரித்தென்றும் துக்கத்தைப் பொழிகின்ற
சதிகார ஆசைகளின் அதிகாரம் தொலைக்கவும்
சன்மார்க்க சமரசம் நமதென்றும் நிலைக்கவும் (அறிவை)

வீரத்தின் பேரைச் சொல்லி வெறிதந்து போரை மூட்டும்
வீணுரை சூழ்ச்சியெல்லாம் நாணுறச் செய்து ஓட்டும்
தீரத்தின் சாத்விகத்தை த்யாகத்தின் தெய்விகத்தை
திடமான மெய்யுணர்வை தெரிவித்து உய்யவைக்கும்
(அறிவை)

# புவி நலம்பெற உழைப்போம்

### பல்லவி

இந்தியத் தாயின் இயல்பாகும்
எம்மான் காந்தியின் செயல் யாவும்

### அநுபல்லவி

முந்தினள் உலகினில் யாவரினும்
முப்பகை வென்றநல் மூதறிவின் (இந்திய)

### சரணங்கள்

அந்தமில் இறைவனின் அருள்நாடும்
அன்பே அறிவென தினம்தேடும்
செந்தமிழ் மொழிதரும் சீலமெல்லாம்
சேர்ந்தது காந்தியின் வேலையெல்லாம் (இந்திய)

இமயம் மலைமுதல் ஈழம்வரை
எண்ணரும் த்யாகிகள் இன்றுவரை
தமதரும் தவத்தால் தரும்தானம்
தரணியில் இன்றுள மெய்ஞ்ஞானம் (இந்திய)

அந்தமெய் ஞானத்தின் ஒளியாகும்
அற்புதன் காந்தியின் வழியாவும்
இந்நநம் உரிமையை இழப்போமோ
இப்புவி நலம்பெற உழைப்போமே (இந்திய)

# அச்சங்கள் நீங்கும்

### பல்லவி

நித்தமும் ஒருதரம் காந்தியை நினைத்தால்
நிச்சயம் நம்முடை அச்சங்கள் நீங்கும்

### அநுபல்லவி

சத்தியம் வலுத்திடும் சாந்தியும் பலித்திடும்
நித்திய ஒழுக்கங்கள் நேர்மையில் நிலைத்திடும் (நித்தமும்)

### சரணங்கள்

மானிடப் பிறவியின் மகத்துவம் விளங்கும்
மன்னுயிர் யாவிலும் தன்னுயிர் துலங்கும்
யானென தென்றிடும் அகந்தைகள் கருகும்
ஆண்டவன் நினைவுடன் அன்புகள் பெருகும் (நித்தமும்)

சுதந்திரம் என்பது சுத்தசன் மார்க்கம்
சூழ்ந்துள யாவர்க்கும் சுகந்தரப் பார்க்கும்
இதந்தரும் பணிசெயல் என்கடன் என்னும்
இங்கிதப் பெருங்குணம் தங்கிடப் பண்ணும் (நித்தமும்)

# குளிர்ந்திடும் செழுங்கனல்

பல்லவி

காந்தியை நினை மனமே—உண்மை
சாந்தியைப் பெற, தினமும் (கா)

அநுபல்லவி

மாந்தருள் அற்புதம் மாநிலப் பெருந்தவம்
கூர்ந்திடும் அறிவினுள் குளிர்ந்திடும் செழுங்கனல் (கா)

சரணங்கள்

சோர்ந்திடும் பொழுதெல்லாம் சோகத்தைப் போக்கவும்
சுழன்றிடு அறிவினை தெளிந்திடத் தேக்கவும்
நேர்ந்திடும் கவலையை நீக்கவும் மருந்தாம்
நினைத்திடும் பொழுதே இனித்திடும் நறுந்தேன் (கா)

மோகன தாஸன் கரம்சந்த் காந்தி
முத்தரும் சித்தரும் முயன்றிடும் சாந்தி
சாகரம் நாணுறும் சற்குணப் பெருமை
சமரச உணர்ச்சியின் கற்பகத் தருவாம் (கா)

வேறுதவம் நமக்கு வேண்டிய தில்லை
வித்தகன் காந்திபெயர் விருப்புடன் சொல்ல
கூறும் தவப்பலனைக் கொடுத்திடும் அதுவே
குறைவற்ற வாழ்க்கையும் நடத்திடப் பெறுவோம் (கா)

# அன்பிற்கு உயிர் தந்தோன்

### பல்லவி

பிறர்க்கென்றே தம்முயிரை பிரியத்துடன் கொடுத்தோர்
பிறருண்டோ காந்தியைப் போல்

### அநுபல்லவி

மறக்கொலை போரிற்சிக்கி மரிப்பவர் எங்குமுண்டு
மற்றும் பலவழியில் மனமின்றிச் சாவதுண்டு
(பிறர்க்கென்றே)

### சரணங்கள்

உயிரைப் பணயம்வைத்து உண்மைக் குழைப்பதுவே
உத்தம சேவையென்று நித்தநித் தமும்சொல்லி
அயர்வின்றி மரணத்தில் அச்சத்தை இகழ்ந்தேசி
அன்பிற்கு உயிர்தரும் ஆற்றலின் புகழ்பேசி
(பிறர்க்கென்றே)

நமனும் நடுங்கிவிட்ட நவகாளி பிணக்காட்டில்
நடையாய் நடந்துகாந்தி நலிந்திட்ட குணம் காட்டும்
சமனும் உயர்வுமில்லா சன்மார்க்கம் வகுத்ததன்
சாதனைக் கேபல வேதனை சகித்ததை (பிறர்க்கென்றே)

உண்ணு விரதம்கொண்ட ஒவ்வொரு தடவையும்
உயிர்தந்து உயிர்வந்த உண்மை உலகறியும்
கண்ணுரக் கண்டதெய்வம் காந்தியின் தியாகத்தில்
கட்டோடு விட்டொழிப்போம் மதவெறி மோகத்தை
(பிறர்க்கென்றே)

# ஊனுடல் கொண்ட ஒரு தெய்வம்

### பல்லவி

மானிட வர்க்கம் கண்டறியா ஒரு
மாபெரும் புதுமை காந்தி மகான்

### அநுபல்லவி

வானுறை தெய்வம் ஊனுடல் கொண்டு
வையகத் தேபுது வழிகாட் டியதென (மானிட)

### சரணங்கள்

இந்திய நாட்டினில் இப்பெரும் அற்புதன்
எம்மிடை பிறந்தது ஒப்பரும் நற்பதம்
நம்திரு நாடே நானிலம் முழுதிலும்
ஞான ஒளிபரப்பும் மோனம் அறிந்ததென (மானிட)

அன்பும் அருளும் அறிவும் ஆற்றலும்
அறநெறி வழுவா ஒழுக்கம் போற்றலும்
இன்பம் தருகிற எல்லாக் குணங்களும்
இப்படிச் சிறிதும் தப்பற இணங்கிட (மானிட)

சத்திய சாந்தம் உத்தமம் என்று
சாதனை புரிந்தவர் மெத்தவும் உண்டு
நித்தமும் வாழ்க்கையில் எல்லா நிலையிலும்
நிறைகுறை யாதவர் இவர்போல் இலையென (மானிட)

# பண்ணை வளர்க்கும் காந்தி

### பல்லவி

உயிரைக் கொடுத்துநமக் குரிமை கிடைக்கச் செய்த
உத்தமன் காந்திநம் உயிரன்றோ

### அநுபல்லவி

பயிரை வளர்க்கும் நீர்போல் பண்ணை வளர்க்கும் காந்தி
பக்தி கெடாதிருந்தால் மெத்தச் சிறப்படைவோம்
(உயிரை)

### சரணங்கள்

அரசியல் சுதந்திரம் அடைந்தது பெரிதல்ல
ஆன்ம சுதந்திரத்தை அழித்துவிடவும் வல்ல
பரிசுடை மோகம்நம்மை பற்றிக் கொள்ளாதபடி
பரமார்த்த எண்ணங்கள் பழுதுபடாமல் காத்து (உயிரை)

அன்னிய நாடுகள்போல் அயலாரைச் சுரண்டிட
ஆதிக்யம் தேடுகின்ற நீதிக்குறை செய்யாமல்
இன்னுயிர் கொடுத்தேனும் இந்தியத் தாய்நாட்டின்
இணையற்ற நன்னெறியைத் துணைகொள்ளும் வழிகாட்டி
(உயிரை)

ஆண்சிங்கம் அதைப்போல ஆற்றல் வளரச் செய்து
அத்துணை சக்தியையும் அன்பில் கிளரச் செய்து
வீண்சங்கம் உட்பகை யாவும் விலகச் செய்து
விஞ்ஞானத் தீமைநீக்க மெஞ்ஞான வேள்விக்காக
(உயிரை)

# ஏற்ற மருந்து

**பல்லவி**

சாந்தியைக் கொடுப்பது காந்தியின் திருப்பெயர்
சந்ததமும் அதனைச் சிந்தனை செய்திடுவோம்

**அநுபல்லவி**

மாந்தருள் பகைமையை மதவெறிக் கொடுமையை
மாற்றி விடுவதற்கு ஏற்ற மருந்ததுவே (சாந்தியைக்)

**சரணங்கள்**

கோபத்தை அடக்கவும் க்ரோதத்தை ஒடுக்கவும்
குற்றத்தைத் தடுக்கவும் குணநலம் கொடுக்கவும்
பாபத்தை ஒதுக்கவும் பரமனைத் துதிக்கவும்
பயமற்று வாழ்ந்திடும் பரிசுத்தம் பலிக்கவும்
(சாந்தியைக்)

சமதர்ம உணர்ச்சியின் சந்தோஷம் வளர்ந்திடும்
சாதி மதங்களென்னும் சழக்குகள் தளர்ந்திடும்
அமைதிகள் நிறைந்துள்ள சமுதாயம் நிலவிடும்
அக்கம்பக் கங்களெல்லாம் அன்பொடு குலவிடும்
(சாந்தியைக்)

# எளியவர்க் குழைத்தவர்

### பல்லவி

சுகபோ கங்களின் சூழ்ச்சியில் மயங்கா
சுகிர்தன் காந்தி மகான்

### அநுபல்லவி

இகபோ கங்களைத் துறந்தவர் தமக்குள்
இவர்போல் எளியவர்க் குழைத்தவர் எவரே (சுக)

### சரணங்கள்

ஏழைகள் குடிசையே இறைவன் கோயில்
என்றவர் தரித்திர நாராயணர் என
வாழியென் றவர்களை வாழ்த்திட வாழ்ந்து
வறுமையின் கொடுமையை வீழ்த்திடச் சூழ்ந்து (சுக)

எளியவர் நலமுறச் செல்வரை இகழான்
ஏழைகட் குதவா எவரையும் புகழான்
பழிசெய்து பெறுகிற சுகங்களைப் பழித்தான்
பக்தியின் வருகிற சக்தியை அளித்தான் (சுக)

தீனர்கள் பணியே திருப்பணி என்று
தினந்தினம் அதற்கே மனந்தர நின்ற
வானுயர் காந்தியை வணங்குதல் ஒன்றே
வறுமையின் கொடுமையைப் போக்கிடும் நன்றே (சுக)

# கடமையும் கருணையும்

### பல்லவி

கடமையும் கருணையும் இப்படிக் கலந்திட
காந்தியைப் போலிங்கு வாழ்ந்தவர் யார் ?

### அநுபல்லவி

உடைமையும் உரிமையும் கடமைகள் தருமென
உணர்ந்திடச் செய்தவர் காந்தி யன்றோ (கடமை)

### சரணங்கள்

கடமை உணர்ந்தவனே உடைமைக் குரியவனும்
கருணை சிறப்பதுவும் கடமை தெரிவதனால்
மடமை பெருகுவதும் கடமை மறப்பதனால்
மானிலத் தவர்க்கிந்த ஞானம் பிறப்பதற்கே (கடமை)

சத்தியக் குறியே கடமையைக் காட்ட
ஸாத்விக நெறியே உரிமையைக் கூட்ட
நித்திய சேவையால் பொதுநலம் நாடி
நெடுநிலம் முழுவதும் உடைமைகொண் டாடி (கடமை)

கடமைகள் புரிவதில் கருணையை மறவான்
கருணையென் றறநெறி கடமையைத் துறவான்
உடைமைகள் இழப்பினும் உரிமையைப் பிரியான்
உரிமைகள் மறுப்பினும் உயிர்க்கொலை புரியான்
(கடமை)

# கடவுளைக் காட்டும்

### பல்லவி

கல்வியினால் வரும் நல்லறி வூட்டும்
காந்தியின் வாழ்வே கடவுளைக் காட்டும்

### அநுபல்லவி

செல்வமும் கீர்த்தியும் செருக்குகள் ஒழியும்
சீரியன் காந்தியின் சிந்தனை வழியே (கல்வி)

### சரணங்கள்

தன்பலம் அல்லது பிறர்வசம் தணியான்
தன்னுடல் சுசிகரம் பொன்னெனப் புனைவான்
என்னொரு விஷயமும் உணர்ந்திடும் இயல்பான்
எதையும் முற்றிலும் அறிந்தபின் முயல்வான் (கல்வி)

இயல்புடை பாசங்கள் எதும் அவற் கில்லை
இரக்கமும் ஈகையும் எண்ணரும் எல்லை
முயல்வதன் ஆற்றலில் முடிவிலன் காந்தி
முற்றிலும் பேரின்பக் கடலெனும் சாந்தி (கல்வி)

எண்குணத் தோன்எனும் இறையவன் இயல்பை
எளிதினில் காட்டிடும் காந்தியின் செயல்கள்
விண்ணகத் தோரெனும் தேவரும் வியக்கும்
விந்தைநம் காந்தியர் தந்தநல் இயக்கம் (கல்வி)

# கலகக் கலிதீர்க்கும்

பல்லவி

கலகங்கள் இல்லாமல் உலகெங்கும் வாழ்ந்திட
காந்தியின் வழிதான் கலிதீர்க்கும்

அநுபல்லவி

விலங்குகள் மக்களெல்லாம் விஞ்ஞான வெறிவிட்டு
வித்தகன் காந்திசொல்லும் சத்தியம் வழிபட்டு (கலக)

சரணங்கள்

அரக்கரின் கதைபோல அழிக்கவே பலம்தேடி
ஐயையோ மனிதர்கள் அலைகின்றார் கொலைநாடி
இரக்கம் புரிவதற்கே ஈசன் கொடுத்த ஜன்மம்
இப்படி அழிவதை தப்பிட வேணும் என்னின் (கலக)

அன்பை மறந்துவரும் அறிவினால் பயனில்லை
அருளைத் துறந்துபெறும் ஆற்றல்மிகவும் தொல்லை
இன்பம் குலைவதெல்லாம் எந்திர மோகத்தால்
என்பதை அறிந்திடில் துன்பங்கள் குறைந்திடும் (கலக)

# கருணை வழி

### பல்லவி

காந்தியை விட்டால் கதிவேறில்லை
கருணையின் வழிகாட்ட

### அநுபல்லவி

சாந்தியை போதிப்பவர் சங்கோப சங்கமுண்டு
சாதித்துக் காட்டினவர் ஏதிந்தக் காந்தியல்லால் (காந்)

### சரணங்கள்

வேதமும் சாஸ்திரம் வீதியிற் பின்தொடர
வேள்வியும் தவங்களும் ஆள்செய்து முன்படர
போதனை செய்வதிலும் சாதனை வேண்டுமென்று
பொழுதும் பிறர்க்குழைத்த முழுதும் கருணைவள்ளல் (காந்)

கொன்றிட எண்ணித்தன்மேல் குண்டொன்றை வீசி [விட்ட
கொடியனை மன்னிக்கவும் இடைசென்று பேசிவிட்ட
கன்றுடைப் பசுவைப்போல் கரைந்து கரைந்து மக்கள்
கலிதீர வேண்டுமென்று பலியாகத் தன்னைத்தந்த (காந்)

ஏழைக் குருகினவர் எவருண்டு இவர்போல
எங்கெங்கு சென்றாலும் என்றென்றும் அதுவேலை
பாழுக் குழைத்தாரென்று பழிவரப் பொறுப்போமா
பாரெங்கும் காந்தியத்தை ஊரெங்கும் பரப்புவோம் (காந்)

# ஒன்றை உணர்விக்க வந்த ஒரு காந்தி

பல்லவி

உடலுக்கும் உயிருக்கும் உள்ளே இருக்கும் ஒன்றை
உணர்விக்க வாழ்ந்தவர் ஒருகாந்தி

அநுபல்லவி

கடலுக்குள் அலைபோல உலகத்தில் நிலைகெட்டு
கரையேறத் தவிக்கின்ற கணக்கற்ற நமக்கெல்லாம் (உட)

சரணங்கள்

உணவும் உடையுமன்றி உறுபொருள் இல்லையென்று
ஓய்வின்றி அலைந்துபின் மாய்கின்ற மனிதர்கள்
பணமும் பதவிக்கென்று பாதகம் பல செய்து
பாவத்தை வளர்க்கின்ற தாபத்தை விலக்கிட (உட)

இன்றுள்ளார் நாளைக்கில்லை என்பதை தினம்கண்டும்
இச்சைப் படிக்குச்சென்று கொச்சையின் பழும்கொண்டு
என்றென்றும் உள்ளவர்போல் கொன்றும்தன் நலந்தேடி
இம்சையில் உழல்கின்ற நம்செயல் திருந்திட (உட)

உயிருக்கும் மேலுள்ள ஒருசத்தை மெய்ப்பிக்க
உடலைச் சுமந்திருந்தார் உலகத்தை உய்ப்பிக்க
பெயருக்கு உணவுண்டு பிறருக்காய் உடைகட்டி
பெரும்பாலும் மக்களைப்போல் அரும்பாடு பட்டாரேனும்
(உட)

# கருணாமூர்த்தியின் பரிணாமம்

### பல்லவி

கருணாமூர்த்தியின் பரிணாமம் திரு
காந்தி மகான் வாழ்க்கை

### அநுபல்லவி

அருணோதய மென அருள் ஒளி உதிக்கும்
அண்ணல் காந்தியை எண்ணிடில் நமக்கும் (கருணா)

### சரணங்கள்

உடமை தனக்கென ஒருபொருள் வேண்டான்
உயிரையும் பிறர்க்கென உதவுதல் பூண்டான்
கடமை என்பது கருணையைப் புரிகிற
காரியம் அல்லது வேறிலை எனும் ஒரு (கருணா)

விருப்பும் வெறுப்பும் தொடரா விரதன்
வேற்றுமை யாவிலும் ஒற்றுமை கருதும்
சிரிப்பும் மகிழ்ச்சியும் பரப்பிடும் செல்வன்
சினமெனும் தீமையை சிறைசெய வல்லன் (கருணா)

தரணியில் யாவரும் தன்இனம் என்றே
தயையொடு அணைத்திடும் குணப்பெரும் குன்றும்
மரணமும் துன்பமும் மருட்டா வித்தன்
மாநிலம் முழுவதும் வணங்கிடும் சுத்தன் (கருணா)

# சொல்லவொண்ணுப் பெருமை

### பல்லவி

சொல்லில் அடங்குமோ காந்தியின் பெருமை
சொன்ன வரைக்கும் சுகிர்தம்

### அநுபல்லவி

கல்லும் புல்லும் கனிந்து கசிந்துருகும்
கருணையின் வடிவென அருள்நெறி காட்டிய (சொல்)

### சரணங்கள்

அன்பினை விட்டொரு இன்பமும் இல்லை
அகிலம் கண்டுள அறிவின் எல்லை
துன்பம் செய்வதைத் தொழிலெனத் தொடரும்
தூர்த்தரும் வியந்திடும் கீர்த்திகள் படரும் (சொல்)

பொய்யும் வஞ்சமும் புலையும் கொலையும்
போர்வெறிக் கொடுமையும் சீர்குலைத் தலையும்
வையம் திருந்திடும் வழிதர என்றே
வாழ்ந்துதன் உயிரையும் ஈந்தனன் அன்றே (சொல்)

நற்குணம் என்பன யாவையும் கூடி
நானிலம் முழுவதும் நலம்பெற நாடி
அற்புதப் புதுமுறை அறவழி காட்டும்
அமரரும் அறியா அன்பினை ஊட்டும் (சொல்)

# காந்தி ஜயந்தி

### பல்லவி

காந்தியின் திருநாள் இது கண்டீர்
கடமைகள் நமக்கெலாம் மிகஉண்டு

### அநுபல்லவி

சாந்தியைக் கோரி சகலமும் துறந்த
சத்துவ போதன் புத்தனும் பிறந்த (காந்தி)

### சரணங்கள்

சாந்தத்தின் பலன்களும் சத்திய நலன்களும்
சமரச வாழ்க்கையின் அமைதியும் துலங்கிட
வாழ்ந்துநன் னெறிகளை வகுத்துத் தொடுத்தவர்கள்
வடித்துக் கொடுத்ததெல்லாம் நடத்தி முடித்த வள்ளல்
(காந்தி)

அன்பின் கலைபுரிந்து அருளின் நிலை தெரிந்து
அச்சமும் ஆசைகளும் மிச்சமில்லா தகற்றி
இன்ப நிலையுரைத்த எண்ணரும் யோகிகள்
எண்ணிய நல்லறங்கள் பண்ணிமுடித்த எங்கள் (காந்தி)

தானமும் தருமமும் தவங்களும் மதங்களும்
தாரணி முயன்றுள வேறுள நெறிகளும்
ஞானம் பெறமுயலும் நல்வழி யாவையும்
நாடும் குணங்களெல்லாம் கூடிநிறைந்த எங்கள் (காந்தி)

# ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி

### பல்லவி

சுதந்திர ஞானத்தின் சுடரொளி தீபம்
சுபஸ்ரீ சுப்ரமண்ய பாரதி நாமம்

### அநுபல்லவி

நிதந்தரும் கவலையை நீக்கிடும் சூத்திரம்
நிச்சய புத்திதரும் அட்சய பாத்திரம் (சுதந்திர)

### சரணங்கள்

அச்சம் எனும்பிணியை அகற்றிடும் மருந்து
ஆற்றலைக் கொடுத்திடும் அமுதத்தின் விருந்து
கொச்சை வழக்கங்களைக் கொளுத்திடும் நெருப்பு
கொடுமையை எதிர்த்திடக் கூரிய மறுப்பு (சுதந்திர)

தெய்வத் தமிழ்மொழியில் புதுமைகள் சேர்த்து
தீரம் விளங்கச் சுத்த வீரமும் வார்த்து
வையம் முழுதும் அதை வணங்கிடச் செய்யும்
வாய்மையும் தூய்மையும் வளர்த்திடும் ஐயன் (சுதந்திர)

பெண்ணின் பெருமைகளைக் காத்திடும் கோட்டை
பேதையர் என்பதனைக் கடிந்திடும் சாட்டை
உண்மை அறிவுகளை உணர்த்திடும் போதம்
உத்தம தத்துவங்கள் ஒலித்திடும் கீதம் (சுதந்திர)

# சுதந்தர தினம்

### பல்லவி

விடுதலை அடைந்து விட்டோம்—உலகம்
வியந்திடும் படிக்கொரு நயந்திகழ் விதத்தினில் (விடுதலை)

### அநுபல்லவி

நடுநிலை தாங்கிடும் நம்மர சோங்கிட
நாநிலம் முழுதுக்கும் ஞானப் பணிபுரிய (விடுதலை)

### சரணங்கள்

பாரதி மெய்ப்புலவன் வாக்குப் பலித்ததென
பண்டுநம் தாதாபாய் கண்ட கனவிதென
தீரன் திலகரிஷி த்யாகம் திகழ்ந்திடவும்
தெய்விக காந்திதவம் வையம் புகழ்ந்திடவும் (விடுதலை)

அன்னியப் பிடிப்புகள் அகன்றத னல்மட்டும்
ஆனந்த சுதந்தரம் அடைவது வெகுகஷ்டம்
உன்னத லக்ஷியங்கள் ஓங்கிட வேண்டும் அதில்
உத்தமன் காந்தி வழி தாங்கிட வேண்டும் இனி (விடுதலை)

கிடைத்த விடுதலையைக் கெடுத்து விடாதபடி
கீழான ஆசைகட்குக் கொடுத்து விடாமல் இடம்
அடுத்திடும் யாவரையும் அன்பின் வழிமதித்து
அகிலம் முழுதும் காந்தி அருளைப் பரப்புதற்கே
(விடுதலை)

# சாந்தியே காந்தி

### பல்லவி

சாந்தியின் விரிவுரை காந்தியின் சரித்திரம்
தமிழா மறக்காதே

### அநுபல்லவி

தேர்ந்தவர் ஞானமும் தெளிந்தவர் மோனமும்
செந்தமிழ் நூல்களெல்லாம் சந்ததம்கோருகின்ற (சாந்தி)

### சரணங்கள்

நாட்டைத் துறந்தவரும் வீட்டைத் துறந்தவரும்
நானா விதம்பல தானம் புரிந்தவரும்
ஏட்டைத் தினம்புரட்டி எண்ணிப் படிப்பவரும்
எல்லா விதத்திலும் நல்லோர் விழைத்திடும் (சாந்தி)

வேதங்கள் தேடுவதும் கீதங்கள் பாடுவதும்
வேள்வி முயன்றதுவும் கேள்வி பயின்றதுவும்
காதம் பலநடக்கும் காவடி யாத்திரையும்
கற்றவர் மற்றவரும் முற்றும் விரும்புகின்ற (சாந்தி)

முந்திநம் முன்னவர்கள் நொந்து தவம் புரிந்து
முற்றும் அறங்களினால் பெற்ற பெரும் பயனும்
இந்திய நாட்டினுக்கே சொந்தப் பெருமை என்று
எந்தெந்த நாட்டவரும் வந்து பயிற்சிபெறும் (சாந்தி)

# தீர்க்கதரிசி

### பல்லவி

தீர்க்க தரிசிசொன்ன மார்க்கமதனை விட்டு
திரும்புவதென்ன மனமே (தீர்க்க)

### அநுபல்லவி

பார்க்குள் பெரியவர்கள் பார்த்த அனுபவத்தை
காக்கும்படி யுதித்த காந்தியெனும் பெரிய (தீர்க்க)

### சரணங்கள்

ஆண்மை மறந்தவர்க்கு ஆளும் திறமையுண்டோ
அன்பைத் துறந்தவர்க்கு இன்ப நிலையுமுண்டோ
பான்மை அறிந்திருந்தும் மேன்மை வழியை விட்டு
பற்பல எண்ணிஎண்ணி அற்பத்தனத்திற் பட்டு (தீர்க்க)

அன்பிற்குயிர் விடுதல் ஆண்மை யதுவே யாகும்
ஆசை அதிகப் பட்டால் ஆளும் திறமை போகும்
துன்பம் சகித்துப் பெற்ற தூய்மை மிகுந்திடும்
துறவி உனக்குச் சொன்ன அறவுரை இகழ்ந்தனை (தீர்க்க)

# கடவுளை அறிந்தவர்கள்

**பல்லவி**

அவரே கடவுளை அறிந்தவராவார்
அனைவரும் மதித்திடத் தகுந்தவராவார் (அவ)

**சரணங்கள்**

துன்பப் படுவோர் துயரம் சகியார்
துடிதுடித் தோடித் துணைசெயப் புகுவார்
இன்பம் தமக்கென எதையும் வேண்டார்
யாவரும் சுகப்படச் சேவைகள் பூண்டார் (அவ)

பசியால் வாடின எவரையும் பார்த்து
பட்டினி தமக்கெனப் பரிதபித் தார்த்து
விசையாய் முடிந்ததை விருப்புடன் கொடுப்பார்
வீண்உப சாரம் விளம்புதல் விடுப்பார் (அவ)

நோயால் வருந்திடும் யாரையும் கண்டு
நோன்பெனச் செய்வார் எல்லாத் தொண்டும்
தாயாம் எனவே தம்சுகம் எதையும்
தள்ளிவைத் தருகினில் தாமிருந் துதவும் (அவ)

# நெஞ்சொடு இரங்கல்

**பல்லவி**

ஒருநாளைக் கொருதரம் ஒருநொடிப் பொழுதேனும்
உன்னைப் படைத்தவனை எண்ணிச் சுகித்ததுண்டோ?
—மனமே!

**அநுபல்லவி**

திருநாளும் தேரும் என்று தேடி யலைந்ததல்ல
சிந்தனை அலையாமல் த்யானத்தில் நிறுத்தியே (ஒரு)

**சரணங்கள்**

விடியுமுன் விழித்தனை
வெளுக்குமுன் வீட்டைவிட்டாய்
வெவ்வேறு இடத்துக்கு
வௌவால்போல் ஓட்டமிட்டாய்
உடலும் மனமும் சோர்ந்து
ஓய்ந்திட வீடு வந்தும்
உண்ணும் பொழுதுங்கூட
எண்ணம் நிலைப்பதில்லை (ஒரு)

சில நாளைக் கதிகாரம்
செய்யும் ஒருவர்க்கஞ்சி
செய்யச்சொல் வதையெல்லாம்
செய்வாய்நீ பல்லைக் கெஞ்சி
பலநாளும் ஜென்மமெல்லாம்
பாலிக்கும் அதிகாரி
பரமனை நினைக்கவும்
ஒருகணம் உனக்கில்லை. (ஒரு)

'நாளும் கிழமையென்று'
நல்லவர் உரைத்தாலும்
'நாளைக்கு ஆகட்டும்
வேலைஅதிகம்' என்பாய்
பாழும் பணத்தைத்தேடி
படும்பாடு கணக்கில்லை
பகவானை எண்ணமட்டும்
அவகாசம் உனக்கில்லை. (ஒரு)

# சக்தி ஸ்தோத்திரம்

### பல்லவி

சக்தி எனக்கே அருள்வாய்—பரா
சக்தியென் தாயுனே நித்தமும் தொழுதனன் (சக்தி)

### சரணங்கள்

பக்தியோ டுந்தனைப் பணிந்திடல் மறந்தேன்
பாரினிற் சுகமெல்லாம் நீயெனத் தெரிந்தேன்
இத்தின முதலுந்தன் இணையடி புரிந்தேன்
இனிமேற் பிணியில்லை கவலைகள் துறந்தேன் (சக்தி)

நோய்களைத் தடுத்திட நுண்ணிய அறிவும்
நொந்தவர் தங்களைக் காத்திடப் பரிவும்
மாய்வதைக் குறைத்திட மருந்துகள் முறிவும்
மந்திர தந்திர மணியவை தெரியும் (சக்தி)

கல்லினும் கட்டுடைய தேகம் எனக்கருள்வாய்
காலனை ஜெயித்திடும் கருணையும் தருவாய்
சொல்லிலும் செயலிலும் தூய்மையைத் தருவாய்
சோம்பலை யோட்டிநற் சுகமெனக் கருள்வாய் (சக்தி)

# வைஷ்ணவன் என்போன் யார்?

**பல்லவி**

வைஷ்ணவன் என்போன் யாரெனக் கேட்பின்
வகுப்பேன் அதனைக் கேட்பீரே ! (வைஷ்)

**சரணங்கள்**

பிறருடைத் துன்பம் தனதென எண்ணும்
பெருங் குணத்தவனே வைஷ்ணவனும்
உறுதுயர் தீர்த்ததில் கர்வங் கொள்ளான்
உண்மை வைஷ்ணவன் அவனாகும்
உறவென மனிதர்கள் உலகுள யாரையும்
வணங்குவன் உடல்மனம் சொல் இவற்றால்
அறமெனத் தூய்மை காப்பவன் வைஷ்ணவன்
அவனைப் பெற்றவள் அருந்தவத்தாள். (வைஷ்)

விருப்பும் வெறுப்பும் விலக்கிய நடுநிலை
விளங்கிட ஆசைகள் விட்டவனாய்
ஒருப்புடன் அன்னிய மாதரைத் தாயென
உணர்வான் வைஷ்ணவன் தன் நாவால்
உரைப்பதிற் பொய்யிலன் ஒருபோதும் அவன்
ஊரார் உடைமையைத் தொடமாட்டான்
வரைப்புள குணமிவை வகிப்பவன் எவனோ
அவனே உண்மை வைஷ்ணவனாம். (வைஷ்)

மாயையும் மோகமும் அணுகா தவனாய்
மனதினில் திடமுள வைராக்யன்
நாயகனாகிய ஸ்ரீராமன் திரு
நாமம் கேட்டதும் மெய்மறந்து

போயதில் பரவசம் அடைகிற அவனுடை
பொன்னுடல் புண்ணிய தீர்த்தங்கள்
ஆயின யாவையும் அடங்கிய க்ஷேத்திரம்
ஆகும் அவனே வைஷ்ணவனும். (வைஷ்)

கபடமும் லோபமும் இல்லாதவனுய்
காமக் ரோதம் களைந்தவனுய்
தபசுடை அவனே வைஷ்ணவன் அவனை
தரிசிப்பவரின் சந்ததிகள்
சுபமடைவார்கள் எழுபத் தோராம்
தலைமுறை வரையில் சுகமுறுவர்
அபமறப் புனிதம் அடைகுவர் பிறப்பெனும்
அலைகடல் நீந்திக் கரை சேர்வார். (வைஷ்)

# திருமுடி சூட்டிடுவோம்

பல்லவி

திருமுடி சூட்டிடுவோம்
தெய்வத் தமிழ் மொழிக்கு (திரு)

அநுபல்லவி

வருமொழி எவருக்கும் வாரிக்கொடுத் துதவி
வண்மை மிகுந்த தமிழ் உண்மை உலகறிய (திரு)

சரணங்கள்

பெற்றவளை இகழ்ந்து மற்றவரைத் தொழுத
பேதமை செய்துவிட்டோம் ஆதலினால் நம் அன்னை
உற்ற அரசிழந்து உரிமை பெருமை குன்றி
உள்ளம் வருந்தினதால் பிள்ளைகள் சீர் குலைந்தோம் (திரு)

அன்னையை மீட்டும் அவள் அரியணை மீதிருத்தி
அகிலம் முழுதும் அவள் மகிமை விளங்கச் செய்வோம்
முன்னைப் பெருமை வந்து இன்னும் புதுமை பெற்று
முத்தமிழ் செல்வியவள் சித்தம் குளிர்ந்திடவே (திரு)

தாயின் மனம் குளிர்ந்தால் தவம் அதுவே நமக்கு
தாரணி தன்னில் நம்மை யாரினிமேல் இகழ்வார்
நோயும் நொடியும் விட்டு நுண்ணறிவோடு நல்ல
நூலும் கலைகளெல்லாம் மேலும் மேலும் வளர்ப்போம்
(திரு)

# தமிழன் பெருமை

**பல்லவி**

தமிழனென்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா

**சரணங்கள்**

அமுதமூறும் அன்பு கொண்டு
அரசு செய்த நாட்டிலே
அடிமையென்று பிறர் நகைக்க
முடிவணங்கி நிற்பதோ!
இமயம் தொட்டுக் குமரிமட்டும்
இசைபரந்த மக்கள் நாம்
இனியும் அந்தப் பெருமை கொள்ள
ஏற்றயாவும் செய்குவோம். (தமிழ)

குஞ்சைச்காக்கும் கோழி போலக்
குடியைக்காத்த மன்னர்கள்
கோல் நடத்த அச்சமின்றி
மேல் நினைப்புக் கொண்டு நாம்
பஞ்சபூத தத்துவங்கள்
பக்தியோடு முக்தியைப்
பார்சிறக்கச் சொன்ன நாமும்
சீர் குறைந்து போவதோ (தமிழ)

கங்கையோடு பெருமை கொண்ட
காவிரிப்பொன் னாட்டிலே
கவலையின்றிச் சோறிருக்கக்
கலைகளெண்ணி வாழ்ந்த நாம்

மங்கி மங்கி வறுமை மிஞ்சி
மதிமயங்கி மாய்வதோ !
மானிலத்தில் சோற்றுப் பஞ்சம்
மறையுமாறு மாற்றுவோம். (தமிழ)

சித்திரத்தில் மிக உயர்ந்த
சிற்பநூலின் அற்புதம்
சின்னச்சின்ன ஊரிற்கூட
இன்னுமெங்கும் காணலாம்
கைத்திறத்தில் ஈடில்லாத
கல்விதந்த தமிழர் நாம்
கைநெறித்து வேலையின்றிக்
கண்கலங்கி நிற்பதேன் ? (தமிழ)

விண் மறைக்கும் கோபுரங்கள்
வினைமறக்கும் கோயில்கள்
வேறு எந்த நாட்டிலுண்டு
வேலையின் விசித்திரம்
கண்ணிறைந்த காவனங்கள்
கனிகள் மிக்க சோலைகள்
கண்டபோது பண்டையெங்கள்
நாகரீகம் காட்டுமே. (தமிழ)

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# நல்ல சமயம்

### பல்லவி

நல்ல சமயமடா—இதை—நழுவ விடுவாயோ ?

### அநுபல்லவி

நாட்டிற் சுதந்திரம் நாட்டி மனிதருள்
தீட்டும் தீண்டாமையும் தீர்த்து விடுதற்கு (நல்ல)

### சரணங்கள்

காந்தியைப்போல் தலைவர்—எந்தக் காலத்திற்கிட்டுமடா
வாய்த்த தருணமிதை—நீ—வழுவியிழப்பாயோ
சூழ்ந்திடும் துன்பங்கள்—வீழ்ந்திட நாமினி
வாழ்ந்திடவும் மனச்—சாந்தியடையவும் (நல்ல)

வேதம் ஒலிக்குதடா—காந்தி—ஓதும் மொழிகளிலே
கீதை ஜொலிக்குதடா—அவர்—செய்யும் கிரியை
யெல்லாம்
வேற்றுமை யில்லாமல்—நாட்டின் நலத்தினைப்
போற்றின யாரையும்—கூட்டி உழைத்திட (நல்ல)

# சும்மா கிடைக்குமோ?

பல்லவி

சும்மா கிடைக்குமோ சுதந்திர சுகமது—மனமே!

அநுபல்லவி

சுத்தமும் பக்தியும் சத்தியம் இல்லாமல்
சூரமும் வீரமும் சொல்லுவ தால் மட்டும் (சும்மா)

சரணங்கள்

உழுது பயிரிடாமல் உணவுகள் கிடைக்குமோ ?
உழைப்பும் களைப்புமின்றி உரிமைகள் அடுக்குமோ ?
அழுது அழுதுருகி அன்பின் கண்ணீர் பெருக
ஆர்வத்தால் அனைவருக்கும் சேவைகள் செய்யாமல்
(சும்மா)

ஒற்றுமை பேசுவேன் உடன்கூடி நிற்காமல்
ஒவ்வொரு சமயத்தில் வெவ்வேறு சொல்லுவேன்
கற்ற என் வித்தையைக் காட்டினதேயன்றி
கசிந்து கசிந்துருகி காரியம் செய்யாமல் (சும்மா)

சத்தியம் சாந்தமென்பேன் சட்டென் றதைவிடுத்துச்
சரித்திரப்படி அது சரியல்லவென்று சொல்வேன்
வைத்த என் கொள்கையில் வைராக்கிய மில்லாமல்
வார்த்தைக்கும் செய்கைக்கும் வேற்றுமை விலகாமல்
(சும்மா)

# தேசத் தொண்டு

பல்லவி

தேசத் தொண்டுகள் செய்திடுவோம்
தெய்வம் துணைவரக் கை தொழுவோம் (தே)

சரணங்கள்

சோறும் துணியும் இல்லாமல்
சோம்பியங் கெவரும் நில்லாமல்
வீறும் புதுமைப் பொதுவாழ்வின்
விடுதலை யின்பம் வேண்டுமென்றால் (தே)

ஜாதிக் கொடுமைகள் நீங்கிடவும்
சமரச உணர்ச்சிகள் ஓங்கிடவும்
நீதிக் கெல்லாம் இருப்பிடமாய்
நிற்குமோர் அரசியல் உருப்படவே (தே)

மனிதனை மனிதன் ஏய்ப்பதையும்
மக்களைப் போரில் மாய்ப்பதையும்
தனியொரு வழியில் தடுத்திட ஓர்
தருமம் உலகினில் தழைத்திடவே (தே)

சத்திய வாழ்வினை நாடுதற்கும்
சாந்தப் பெருமைகள் கூடுதற்கும்
உத்தமக் காந்தியின் உபதேசம்
உலகுக் கோதும் நம் தேசம் (தே)

தாழ்ந்தவ ரென்பர் இங்கில்லை
தரித்திரம் நமக்கினிப் பங்கில்லை
வாழ்ந்திடும் வரையிலும் புகழ் செய்வோம்
வானிலும் உயர்வாய் வாழ்ந்திடுவோம் (தே)

# கொடி பறக்குது

### பல்லவி

கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா
கோணலற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா

### சரணங்கள்

சிறை கிடந்து துயரடைந்த
தேசபக்தர் நட்டது
தீரவீர சூரரான
தெய்வ பக்தர் தொட்டது
முறை கடந்து துன்பம் வந்து
மூண்டு விட்ட போதிலும்
முன்னிருந்து பின்னிடாமல்
காக்க வேண்டும் நாமிதை (கொடி)

வீடிழந்து நாடலைந்து
வினையிழந்த நாளிலும்
விட்டிடாத தேச பக்தர்
கட்டி நின்று காத்தது
மாடிழந்து கன்றிழந்து
மனையிழக்க நேரினும்
மானமாக நாமுமிந்தக்
கொடியைக் காக்க வேண்டுமே (கொடி)

மனமுவந்து உயிர்கொடுத்த
மானமுள்ள வீரர்கள்

மட்டிலாத துன்பமுற்று
நட்டு வைத்த கொடியிது
தனமிழந்து கனமிழந்து
தாழ்ந்துபோக நேரினும்
தாயின் மானம் ஆனஇந்த
கொடியையென்றும் தாங்குவோம் (கொடி)

# வாழிய கொடியே

### பல்லவி

கொடியைக் கும்பிடுவோம்—நம்முடை நாட்டின்
கொடியைக் கும்பிடுவோம் (கொடி)

### சரணங்கள்

எந்தக் கடவுளை எவர்தொழு தாலும்
எத்தனை வேற்றுமை நமக்கிருந் தாலும்
இந்தியர்க் கெல்லாம் பொதுவாம் தெய்வம்
இந்தக் கொடியே இதிலென்ன ஐயம் (கொடி)

சத்தியப் பாறையில் வேர் ஊன்றிய கொடி
சாந்தக் கோலின் உச்சியில் மணிமுடி
நித்திய மாகிய சுதந்தர வாழ்வினை
நித்தமும் நினைத்திட நின்றெமை ஆள்வது (கொடி)

காற்றோடு பெருமழை கலந்தடித்தாலும்
கடுத்தவர் இருந்திடில் படை யெடுத்தாலும்
போற்றி இக் கொடியினை உயிரெனக் காப்போம்
பூதலம் வியந்திடும் புகழொடு பூப்போம் (கொடி)

ஏழையும் செல்வனும் எனதென தென்றே
எல்லோ ரும்தொழ நடுவில் நின்றே
வாழிய வையகம் வாழ்ந்திட வேண்டி
வாழிய கொடியே ! வாழ்க பல்லாண்டு (கொடி)

# கொடியைப் போற்றிக் கும்பிடு

**பல்லவி**

கொடியைப் போற்றிக் கும்பிடு
கொடுமை தீரும் நம்பு நீ (கொடி)

**சரணங்கள்**

அச்சம் போக்கும் கொடி இது
ஆண்மை நல்கும் கொடி இது
இச்செகத்து வாழ்வினை
இன்பமாக்கும் கொடி இது (கொடி)

பரத நாட்டின் கொடி இது
பழமையான கொடி இது
விரதமாகப் போற்றினால்
விருப்பம் யாவும் சித்தியாம் (கொடி)

மரணமென்ற எண்ணமே
மனதிலின்றிச் செய்திடும்
திரணமாக எதையுமே
தியாகம் செய்யத் தந்திடும் (கொடி)

ஜாதிபேதத் தீமையைச்
சாம்பலாக்கும் கொடி இது
நீதியான எதையுமே
நின்று காக்கும் கொடி இது (கொடி)

# ஆடு ராட்டே!

**பல்லவி**

ஆடு ராட்டே சுழன் றாடுராட்டே

**அநுபல்லவி**

சுழன்று சுழன்று சுழன் றாடுராட்டே—இனிச்
சுயராஜ்யம் வந்ததென் று (ஆடு)

**சரணங்கள்**

பாபம் குறையுமென்று ஆடுராட்டே—இனிப்
பயங்கள் மறையுமென் று ஆடுராட்டே
கோபங் குறையுமென் று ஆடுராட்டே—நல்ல
குணங்கள் மிகுந்த தென் று (ஆடு)

மேலான ஜாதியென் று மிக்கப் பேசி—மிக
மாறான காரியங்கள் செய்து வாழும்
மாலான ஜனங்களின் வஞ்சனை யெல்லாம்—இனி
மாண்டு மடியுமென் று (ஆடு)

ஏழை கண்ணீர் சொரிய மிக்கவருத்திப்—பல
எத்துக்கள் செய்தே பிழைக்கும் மனிதரெல்லாம்
வாழமுடி யாதினிமேல் வஞ்சனையினால்—அவர்
வாழ்க்கை திருந்து மென் று (ஆடு)

வம்பளந்து வீண்பொழுது போக்கமாட்டார்—பெண்கள்
வாசலிலே கூட்டமிட்டுப் பேசமாட்டார்
துன்பமில்லை சோம்பியவர் தூங்கமாட்டார்—குடி
சுத்தப் படு மென் று சொல்லி (ஆடு)

சாந்தி பெருகுமென் று ஆடுராட்டே—மனச்
சாட்சி விளங்குமென் று ஆடுராட்டே
காந்தி துலங்குமென் று ஆடுராட்டே—அந்தக்
காட்சி சுதந்தர மென் று (ஆடு)

# சத்தியம் மறந்தனே

### பல்லவி

சத்தியம் மறந்தனே சாந்தம் குறைந்தனே
சத்யாக்ரஹம் விட்டு மனமே (சத்தியம்)

### அநுபல்லவி

உத்தம வழியினை உலகினுக் குணர்த்திட
உன்னை யன்றோ நம்பி யிருந்தேன் (சத்தியம்)

### சரணங்கள்

உடல் பொருள் ஆவியும் உண்மைக்கு தத்தம் என்று
ஓயாமல் உரைத்தனே மனமே!
கடல் பெரும் பயன் வந்து கைகூடும் சமயத்தில்
கைவிட நினைத்தனே மனமே (சத்தியம்)

அதிகார அகந்தையை அகற்றிட வேண்டுமென்று
அதற்கென்றே முன்வந்தாய் மனமே!
சதிகாரருடன் சேர்ந்து அதிகார வெறிகொண்டு
சங்கல்பம் மறந்தனே மனமே! (சத்தியம்)

அன்பின் வழிநடந்து அறங்கள் நிலைநிறுத்த
அர்ப்பணம் நான் என்றாய் மனமே!
துன்பம் மிகக்கொடுக்கும் ஆசைகள் தூண்டிட
தூய்மையிற் குறைந்தனே மனமே! (சத்தியம்)

# உண்மை வளர்ந்திடாமல்

### பல்லவி

உண்மை வளர்ந்திடாமல் ஒழுக்கம் உயர்ந்திடாமல்
உண்டோ சுதந்திரமே (உண்மை)

### அநுபல்லவி

பெண்மை நிறைந்த வெறும்—பேதைகள் பக்தியென்ற
பேச்சுக்கோ அளவில்லை சீச்சீ இதென்ன தொல்லை
(உண்மை)

### சரணங்கள்

அதிகாரம் செலுத்திடும் ஆசை மிகவுமுண்டு
அதனாலே பணம் சேர்க்கும் ஆத்திரமே கொண்டு
எரிகின்ற வீட்டிலே எடுத்தது லாப மென்னும்
எண்ண முடையவர்க்கு நண்ணுமோ சுதந்திரம்
(உண்மை)

நாவினிற் சுதந்திரம் நாட்டம் பணத்தில் குறி
நல்லதோ பொல்லாதோ வந்த வரையில் சரி
பாவ புண்ணிய மெல்லாம் பண்டை காலத்துப் பேச்சு
பாதகம் குறையாமல் பாவனை எதற்காச்சு (உண்மை)

சாத்திரம் வேதமெல்லாம் நாத்திறத் தாடுது
சாமிகள் கோவிலிலே தாமங்கே வாடுது
மாத்திரை அளவேனும் மனதில் நினைவில்லார்க்கு
மங்கள சுதந்திரம் எங்கே வருமவர்க்கு (உண்மை)

# என்ன உறக்கமடா?

### பல்லவி

என்ன உறக்கமடா உனக்கென்ன மயக்கமடா (என்ன)

### அநுபல்லவி

அன்னை படுந்துயர் இன்னு மறிந்திலை
பின்னை அவளுன்னைப் பெற்றுப் பலனென்ன (என்ன)

### சரணங்கள்

கட்டத் துணியுமின்றி உண்ணக் கஞ்சி யுணவுமின்றி
நெட்டும் கிழவயதில் அவள் நெஞ்சம் மிகவும் குன்றி
பெற்ற வயிறவள் பற்றி யெறிந்திட
முற்றுந் துயரவள் உற்ற சமயத்தில் (என்ன)

கண்ணைத் திறந்து முன்னால் இப்போ என்ன நடக்குது பார்
உன்னைப் பரிந்து பெற்றாள் ஒரு பெண்ணைப் பிறர் நகைக்க
ஓவென் றலறியே மேவியவளுன்னை
ஆவி துடித்திடக் கூவியழைக்கையில் (என்ன)

# நல்ல வழியிருக்க

### பல்லவி

நல்ல வழியிருக்க அல்லல் வழி நினைத்து
நாளும் அலைந்தாய் நெஞ்சமே (நல்ல)

### அநுபல்லவி

தொல்லை முனிவரர்கள் சொல்லிய வழியது
சுதந்திர நாட்டிற்குச் செல்லுதற் கெளியது (நல்ல)

### சரணங்கள்

கோப மென்னும் வெயிலின் தாபமங் கடிக்காது
குரோத மெனும் பனியின் குளிர்வந்து நடுக்காது
சாபம் பிறர்க்குச் சொல்லும் தாகமும் எடுக்காது
சங்கடப் பேய்கள் நம்மை அங்கேதும் தடுக்காது (நல்ல)

ஆய்ந்த பெரியவர்கள் தேர்ந்தது அவ்வழி
ஆனந்த சுதந்திரம் போனவர்க் கங்கு வெளி
காந்தி முனிவன் சொல்லும் சாந்த மென்றொரு மொழி
காட்டிய வழி சென்றால் வீட்டை யடைவாய் தெளி (நல்ல)

# இந்தியத் தாய் தோத்திரம்

### பல்லவி

தாயே வந்தனம்—இந்தியத்
தாயே வந்தனம்

### அநுபல்லவி

தாரணி தன்னில் வேறிலை இணையெனப்
பூரண வளந்திகழ் புண்ணிய பூமியெங் (தாயே)

### சரணங்கள்

நிலவளம் நீர்வளம் நிறைந்ததுன் நாடு
நீண்ட உன் பரப்பிலும் வேறிலை ஈடு
விலையிலும் விளைவிலும் மலிந்ததுன் தேசம்
வேண்டிய யாவும்உன் எல்லையில் வாசம் (தாயே)
பாஷைகள் பற்பல படித்தவள் நீயே
படித்ததன் பயன்பெறும் நடத்தையுள்ளாயே
ஆசைகள் அகற்றிய அறங்களிற் சிறந்தாய்
அன்பின் வழிகளை அனைத்தையும் அறிந்தாய் (தாயே)
ஞானமுங் கலைகளுக் கிருப்பிடமாவாய்
நாகரீகத்தின் பிறப்பிடமாவாய்
தானமும் தவங்களைத் தாங்கினதுன்கை
தருமம் யாவையும் தழைத்தது மிங்கே (தாயே)
மதவெறிக் கொடுமையை மாற்றும் உன் பொறுமை
மற்றவர் மதத்தையும் போற்றுமுன் பெருமை
சதமென்னும் சத்திய சாந்தியை உரைப்பாய்
சன்மார்க்கத்தவர் சிந்தையில் இருப்பாய் (தாயே)

# புது வாழ்வு

### பல்லவி

புது வாழ்வு வரவேணும் வரவேணும் எங்கள்
பொது வாழ்வு பலமுற்றுத் தரவேணும் புகழே (புது)

### சரணங்கள்

அதிகாலை எழுகின்ற கதிரோன் தன் உறவால்
அலர்கின்ற மலர்போல புதுவாழ்வு பெறுவோம்
புதிதான உணர்வோடு உலகத்தில் எங்கும்
புலனாகும் கலையாலும் நிலையாக எங்கும்
விதிகூட வழிவிட்டு விலகிற்று எனவே
விதமாக விதமாக விரிகின்ற நினைவாய்
இதமாக எல்லாரும் இனிதாக வாழ்வோம்
என்கின்ற கலைசொல்லும் மன்றங்கள் சூழ்வோம் (புது)

மரணத்தில் அஞ்சாத மனவீரம் வேண்டும்
மனதுக்குள் மருளாத மதிசாந்தம் வேண்டும்
இரணத்தை எண்ணாமை எவருக்கும் வேண்டும்
இழிவான மொழிபேசி களியாமை வேண்டும்
திரணத்தின் அளவாக போகங்கள் எண்ணி
தேசத்தின் பொது வாழ்வின் சேவைகள் பண்ணும்
அரன் ஒத்த நிலையான அறமின்னும் வளர
அறிவான புதுவாழ்வு வரவேணும் குளிர (புது)

# யாராலே?

சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவது எவராலே?
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணிற் படுவன அவை என்ன?
பேரிடி மின்னல் எதனுலே?
பெருமழை பெய்வது எவராலே?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி?
அதைநாம் எண்ணிட வேண்டாமோ!

தண்ணீர் விழுந்து விதையின்றி
தரையில் முளேத்திடும் புல் ஏது?
மண்ணிற்போட்டது விதையொன்று
மரம்செடியாவது யாராலே?
கண்ணில் தெரியாச் சிசுவை யெல்லாம்
கருவில் வளர்ப்பது யார்வேலே?
எண்ணிப் பார்த்தால் இதற்கெல்லாம்
ஏதோ ஒருவிசை இருக்குமன்றே!

அல்லா வென்பார் சில பேர்கள்
அரன் அரி யென்பார் சில பேர்கள்
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்
சொல்லால் விளங்கா 'நிர்வாணம்'
என்றும் சிலபேர் சொல்வார்கள்
எல்லா மிப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே!

அந்தப் பொருளை நாம் நினைத்து
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்
எந்தப்படியாய் எவர் அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன ?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப்போம் அதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

# தமிழ் நாடு வாழ்க!

### பல்லவி

வீரத்தில் நிறைவான தமிழ் நாடு வாழ்க!
வித்தைக்கு உறைவான தமிழ் நாடு வாழ்க!

### அநுபல்லவி

சூரத்தின் துணையான தமிழ்நாடு வாழ்க!
துஷ்டர்க்குப் பணியாத தமிழ்நாடு வாழ்க!

### சரணங்கள்

வாள் கொண்டு நேர்நின்று போர்தந்த போதும்
வஞ்சங்கள் புரியாத தமிழ்நாடு வாழ்க!
கோள் கொண்டு பொய் சொல்லி குற்றேவல் செய்யா
குணமிக்க ஜனமிக்க தமிழ்நாடு வாழ்க!
கொல்லாமை உயர் வென்னும் தமிழ்நாடு வாழ்க!
கொடை வள்ளல் பலர் நின்ற தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க!
இரவாமை அறமென்னும் தமிழ்நாடு வாழ்க!
படையாமல் உண்ணுத தமிழ்நாடு வாழ்க!
பகையாரும் எண்ணுத தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள் அவை வந்த போதும்
அநியாயம் எண்ணுத தமிழ்நாடு வாழ்க!

630
O31:1M88x
JA
UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS